1972 மார்ச் 10]

பிற்பட்ட மாணவர்களுக்கு உணவு விடுதிகள்

***422 வின—திரு. இ. ராமசாமி :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் பிற்பட்டோர் மாணவ மாணவிகளுக்கான உணவு இல்லங்கள் ஏதேனும் இவ்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டு உள்ளனவா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இவ்வாண்டு கோயமுத்தூரிலும், பெருந்துறையிலும் பின்தங்கிய மாணவர்களுக்கு ஒவ்வொரு உணவு விடுதியும், அவினாசியில் குற்ற பரம்பரைச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கு ஒரு உணவு விடுதியும் திறக்க அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. இ. ராமசாமி : தலைவரவர்களே, அதைப்போல பொள்ளாச்சி வட்டத்திலும் ஒரு விடுதி திறப்பதற்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, அடுத்த ஆண்டு 35 விடுதிகள் திறப்பதற்கு உத்தேசமுள்ளது. அதிலே பொள்ளாச்சி பற்றியும் யோசிக்கலாம் என்று கருதுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், அந்த ஒவ்வொரு விடுதியிலேயும் எத்தனை மாணவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள் ? எத்தனை மாணவர்களுக்கான வசதிகளோடு விடுதிகள் ஆரம்பிக்கப் படுகின்றன என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, உயர் நிலைப்பள்ளிகள் இருக்கும் இடங்களில் 50 மாணவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள், கல்லூரிகள் இருக்கும் இடங்களில் 100 மாணவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, பிற்பட்ட மாணவ மாணவிகள் உணவு விடுதிகளுக்காக இப்பொழுது எத்தனை கட்டிடங்கள் கட்டுவதற்கு உத்தேசம் இருக்கிறது ? அப்படியிருந்தால் எந்தெந்த மாவட்டங்களில் அந்தக் கட்டிடங்கள் கட்டப்படும் ?

[1972 மார்ச் 10

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, நிதிநிலை காரணமாக தற்பொழுது அப்படிப்பட்ட உத்தேசங்கள் எதுவுமில்லை.

திரு. எம். சுரேந்திரன் : சார், பிற்பட்டோர் மாணவ மாணவிகளுக்காக விடுதிகளை ஆங்காங்கு கட்டுவதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். பிற்பட்ட மாணவ, மாணவிகளுக்காக எவ்வளவு விடுதிகள் தேவை என்று கணக்கிடப்பட்டிருக்கிறதா? ஒவ்வொரு பகுதியிலேயும் என்ன முன் உரிமைகள் அளிக்கப்பட்டு அந்தப் பகுதிகளில் கட்டிடம் கட்டுவதற்கு வழி வகுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, தேவைகளை ஆங்காங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மூலமும் ஆங்காங்குள்ள டிஸ்ட்ரிக்ட் வெல்ஃபேர் அதிகாரிகள் மூலமும் ஆராய்ச்சி செய்து ஆங்காங்கு இந்த உணவு விடுதிகளை உருவாக்குகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Tourist Bungalow for Devarabetta

* 423 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether the Government have received and proposal from the Collector of Dharmapuri district (last year) for constructing a tourist bungalow and also for providing other facilities at Devarabetta in Thali Block of Denkanikota taluk; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

THIRU K.S. KOTHANDARAMIAH : Sir, the Thali area in Hosur taluk is said to be " Little England " and is a very nice place for tourism. The Hon. Minister for Backward Classes knows it well; May I know from the Hon. Minister whether he will consider the request to construct a tourist bungalow there?

மாண்புமிகு திரு க. இராசாராம் : தலைவரவர்களே, இப்பொழுது சுற்றுலாத்துறையில் நான்கைந்து இடங்களில்தான் இப்படிப்பட்ட சுற்றுலா மாளிகைகள கட்டுவதற்கான உத்தேசங்